# கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

# வ/ப திறன் அபிவிருத்தி நிதியம்

SDFL
Creating Career Confidence ...

# பதவி வெற்றிடம்

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள வ/ப திறன் அபிவிருத்தி நிதியத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை வகுதி: சிரேஷ்ட முகாமையாளர் (HM 1-1) பதவி: பொது முகாமையாளர் பதவிகளின் எண்ணிக்கை 01**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**(அ) கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகவியல்/ பொருளியல் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவ பட்டமொன்றுடன் பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

**(ஆ) அனுபவம்**

பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

''முகாமைத்துவ'' சேவை வகுதியில் 1ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 5 வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பளக் குறியீடு அல்லது சம்பள அளவு:**
  HM 1-1-2025 ரூபா 140,640 / 15x4,100 - 202,140
  (01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க)
- **வயதெல்லை:** 40 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனையவை:**

**சகல விண்ணப்பதாரர்களும்**

I. இலங்கைப் பிரசைகளாகவிருக்க வேண்டும்.

II. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

IV. இந்தப் பதவி நிரந்தரமானது என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரிமைத்துவம் உள்ளது.

V. மேற்கூறிய சம்பளத்திற்குப் புறம்பாக அரச தொழில்முயற்சி திணைக்களத்தினால் (PED) அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

VI. அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பத்தை குறித்த நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

VII. நேர்முகத் தேர்விற்கு அழைத்தல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

முழுமையான சுயதரவுகள் உட்பட பிறப்பத்தாட்சிப் பத்திரம், ஏனைய இயைபுடைய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்கள், சேவை சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத இரண்டு சான்றுபகர்வோரின் பெயர் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் 2025 ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். தபாலில் காணாமல் போகும் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் பொறுப்பு கூறாது. குறித்த விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**வ/ப திறன் அபிவிருத்தி நிதியம்,**
**''நிபுணதா பியச'', 7ஆம் மாடி,**
**இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.**

**தொலைபேசி: 011 250 7274**